மாலை மலர்

31.03.2018



முகாம் தொடக்க விழாவில் பங்கேற்ற காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன், பொது மேலாளர் தங்கராசு (காகிதம்), மற்றும் டாக்டர்களை படத்தில் காணலாம்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# இல்வச பொது மருத்துவ முகாம்

வேலாயுதம்பாளையம், மார்ச். 31–

கரூர் மாவட்டம் வேலாயுதம் பாளையம் அருகே உள்ள புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோவை மெடிக்கல் சென்டர் – ஹாஸ்பிட்டல் சார்பில் இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் டி.என்.பி.எல்.சமுதாய கூடத்தில் நடைபெற்றது.

முகாமினை காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

கோவை மெடிக்கல் சென்டர் – ஹாஸ்பிட்டல் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் டாக்டர்.ஏ.அருள் செல்வன் (நரம்பியல் சிகிச்சை), டாக்டர் அரவிந்த் (வயிறு மற்றும் ஜீரண மண்டல சிகிச்சை), டாக்டர்.மு.பாஸ்கரன் (எலும்பு முறிவு மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை), டாக்டர் திவாகர் (காது, மூக்கு, தொண்டை மற்றும் கழுத்து அறுவை சிகிச்சை), டாக்டர்.கௌரி லட்சுமி (மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம்), டாக்டர் மங்கள குமார் (சிறுநீரக சிகிச்சை), டாக்டர். மனோன் மணி (குழந்தைகள் நல மருத்துவம்), டாக்டர் சிவதசனி (பல், வாய் மற்றும் முக அறுவை சிகிச்சை), டாக்டர் சரவணன் (இருதய நல மருத்துவம்), டாக்டர் சதீஸ் குமார் (லேப்ரோஸ்கோபி, உடல் எடை குறைப்பு மற்றும் குடல் அறுவை சிகிச்சை), டாக்டர்.ஸ்மிதா அசோக், டாக்டர் விஜயபிரகாஷ் (பொது மருத்துவம்), டாக்டர் விக்னேஷ் கந்த குமார் (புற்றுநோய் மருத்துவம்), டாக்டர்.வித்யா ஜஹகிர்தார் (சர்க்கரை நோய் மற்றும் தைராய்டு மருத்துவம்), டாக்டர் விவேகானந்தன் (கல்லீரல் அறுவை சிகிச்சை), டாக்டர். வெங்கடேஷ் (கால் நரம்பு சுருள் நோய் சிகிச்சை) ஆகிய சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்திருந்த 520 நபர்களுக்கு சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, இருதயம், எலும்பு, குழந்தைகள் நலம், மகப்பேறு, கர்ப்பப்பை, பல், புற்றுநோய், கல்லீரல், நரம்பியல், காது, மூக்கு, தொண்டை மற்றும் சிறுநீரகவியல் சம்பந்தப்பட்ட அனைத்து நோய் அறிகுறிகளுக்கும் பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர். அனைத்து மருத்துவர்களுக்கும் மற்றும் மருத்துவமனையைச் சார்ந்தவர்களுக்கும் பொது மேலாளர் தங்கராசு (காகிதம்), மேலாளர் (மனிதவளம்) சுந்தரம் ஆகியோர் நன்றி தெரிவித்து கவுரவித்தனர்.

முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்று மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களுக்கு எப்சிஜி, பி.எம்.டி., மற்றும் பாப்ஸ்மியர் பரிசோதனை செய்யப்பட்டு மேலும் கிராம மக்களுக்கும், குழந்தைகளுக்கும் ரூ.40,000 மதிப்பிலான மருந்து மற்றும் மாத்திரைகள் அனைத்தும் காகித நிறுவனத்தின் சார்பாக இலவசமாக வழங்கப்பட்டது. முகாமினை காகித நிறுவனத்தின் மனித வளத்துறை துணை பொது மேலாளர் சுரேஷ் தலைமையில் மனித வளத்துறை அலுவலர் கள் செய்திருந்தனர்.